# குழித்துறை நகராட்சி

## குழித்துறை நகர்மன்றத்தின் 09-09-2020 புதன்கிழமை நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றப்பொருள் மற்றும் தீர்மானம்

**பொருள் எண்.1**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN75M.8752-ற்கு 2020-2021-ம் ஆண்டிற்கு தகுதி சான்று பெறுவதற்கு மேற்படி வாகனத்திலுள்ள பழுதுகள் நீக்கம் செய்யும் பொருட்டு வாகனம் ஆய்வு செய்யப்பட்டு மதிப்பீடு ரூ.60,000/- வரப்பெற்றுள்ளது. மேற்படி வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்யவும் அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**நகர்மன்ற தீர்மான எண் : 3581**
**அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.2**

தமிழக அரசின் ஒராண்டு சாதனைகள் தொடர்பாக குழித்துறை நகராட்சியின் வளர்ச்சி திட்டப்பணிகள் தொடர்பாக தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்கு விளம்பரக் கட்டணம் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது. பட்டியலில் கண்ட தொகையினை வழங்கவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கும்.

| | | |
|---|---|---|
| தினமுரசு | - | 9975 |
| குமரி முரசு | - | 9975 |
| ESS.ESS. Publication | - | 9975 |
| தமிழ் முரசு | - | 9975 |
| தினகரன் | - | 9975 |
| மாலை மலர் | - | 9912 |

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3582**
**அனுமதிக்கப்படுகிறது**

# குழித்துறை நகர்மன்றத்தின் 30-09-2020 புதன்கிழமை நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றபொருள் மற்றும் தீர்மானம்

## பொருள் எண். 1

குழித்துறை நகரம் புல எண்.C7/68-ல் திரு.L. ஜோ என்பவர் கட்டிடம் கட்டுவது தொடர்பாக, திருமதி.C. வசந்தகுமாரி என்பவர் நகராட்சி ஆணையர் மற்றும் 8 பேர் மீது மதுரை உயர்நீதிமன்ற கிளையில் WP(MD)No.8224 of 2020-ன் படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில், நகராட்சி சார்பில், வழக்கறிஞர் திரு.P. ஆதிமூலபாண்டியன் என்பவர் ஆஜராகிய வகையில் வழக்கறிஞர் கட்டணம் ரூ.10000/- வழங்க கோரியுள்ளார். எனவே மேற்படி தொகை ரூ.10,000/- மட்டும் நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

F.No.1099/2020/TPI.

**நகர்மன்ற தீர்மான எண் : 3583**

**அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண். 2

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத்துறை அரசாணை எண்.298, நாள் 02-09-2020-ல் கோவிட்-19 பொது ஊரடங்கு காரணமாக குழித்துறை நகராட்சி - குத்தகைக்கு விடப்பட்டுள்ள கடைகள், ஸ்டால்கள், பேருந்து நிலைய நுழைவு கட்டணம், சைக்கிள் நிறுத்துமிடம், கார் ஸ்டாண்டு, கட்டண கழிப்பறை, மீன்மார்கெட், காய்கறி சந்தை மற்றும் திருமண மண்டபம், பிற அசையா சொத்துகள் ஆகிய குத்தகை இனங்களுக்கு 1-4-2020 முதல் 31-05-2020 வரை உள்ள இரண்டு மாதங்களுக்கு வாடகை தொகை செலுத்துவதிலிருந்து தள்ளுபடி செய்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. எனவே நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை எண்.298, நாள் 02-09-2020 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.**
**ந.க.எண்.2036/2018/அ2.**

**நகர்மன்ற தீர்மான எண் : 3584**
**அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண். 3</u>**

குழித்துறை நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள், ஒட்டுநர்கள், மின்கம்பி உதவியாளர், மகப்பேறு மாது மற்றும் அலுவலக உதவியாளர்களுக்கு 2020-2021-ம் ஆண்டிற்கு சீருடைகள் வழங்கவும், அதற்கான தையற்கூலி ஆண் பணியாளருக்கு 1 ஜோடிக்கு ரூ.400/- வீதம் இரண்டு ஜோடிக்கு ரூ.800/-ம், பெண் பணியாளர்களுக்கு ஒரு ஜோடிக்கு ரூ.40/- வீதம் இரண்டு ஜோடிக்கு ரூ.80/-ம் வழங்கவும் அதற்கான செலவினமாக ரூ.1,50,000/- (ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம்) நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2346/2015/அ2.

**நகர்மன்ற தீர்மான எண் : 3585**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 4</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் லெட்சுமி ஜீவல்லரி காந்திமைதானம் முதல் மேம்பாலத்தூண் எண்.31 சி.எஸ்.ஐ. மிஷின் ஆஸ்பத்திரி அருகில் வரை 975.00M. ‘தூரத்திற்கு ஏற்கனவே உள்ள 160MM PVC குழாயை அகற்றிவிட்டு புதிதாக 150MM DI குழாய் பதிப்பதற்கு ரூ.46.00 இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மதிப்பீட்டு தொகையான ரூ.46.00 இலட்சத்தில் நெடுஞ்சாலை துறையிடமிருந்து பெறப்பட்ட நிதியில் மேற்படி பணியினை செய்வதற்கு 23-09-2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.கே.ஜி. கிருஷ்ணதாஸ் | மதிப்பீட்டை விட 7.79% குறைவு |
| 2 | திரு.டி. ஜஸ்டின்குமார் | மதிப்பீட்டை விட 4.94% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 திரு.கே.ஜி. கிருஷ்ணதாஸ் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

அ.கு. - அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3586**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 5</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட சி.எஸ்.ஐ. மருத்துவமனை அருகில் மேம்பாலத்தூண் எண்.31 முதல் நகராட்சி எல்கை ஐஸ்வரியா மருத்துவமனை வெட்டுவெந்நி வரை 330மீ. நீளத்திற்கு ஏற்கனவே உள்ள 160MM PVC குழாயை அகற்றிவிட்டு புதிதாக 150MM DI குழாய் 300மீ. நீளத்திற்கு 90MM PVC Pipe பதிப்பதற்கு ரூ.25.00 லட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மதிப்பீட்டு தொகையான ரூ.25.00 இலட்சத்தில் மேற்படி பணியினை செய்வதற்கு 23-09-2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.கே.ஜி. கிருஷ்ணதாஸ் | மதிப்பீட்டை விட 4.45% குறைவு |
| 2 | திரு.டி. ஜஸ்டின்குமார் | மதிப்பீட்டை விட 7.15% குறைவு |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 7.15% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.டி. ஜஸ்டின்குமார் என்பவரால் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.
அ.கு. - அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண் : 3587**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 6</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20-ல் ஆர்.சி.தெருவிலுள்ள சேவியர் ஆடிட்டோரியம் முன்பகுதி முதல் நந்தன்காடு வரையுள்ள மழைநீர் வடிகால் ஒடையில் பராமரிப்பு மற்றும் காங்கிரீட் சிலாப் அமைக்கும் பணிக்கு ரூ.6.20 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 24-09-2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்காணும் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.எ. ஆன்றணி, பாகோடு | மதிப்பீட்டை விட 0.32% அதிகம் |
| 2 | திரு.டி. கிறிஸ்டோபர், மார்த்தாண்டம் | மதிப்பீட்டை விட 0.17% குறைவு |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2-ல் திரு.டி. கிறிஸ்டோபர் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் பார்வையிட்டு அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3588**
**அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண். 7</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்திற்கு Sodium Hypochloride solution (Bleaching Liquid) வினியோகம் செய்ய ரூ.8.70 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 24-09-2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்காணும் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.கே.ஜி. கிருஷ்ணதாஸ் குழித்துறை. | மதிப்பீட்டை விட 0.00% குறைவு |
| 2 | திரு.பி. ஜெயசந்திரன், கண்ணக்கோடு | மதிப்பீட்டை விட 5.55% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் திரு.கே.ஜி. கிருஷ்ணதாஸ் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் பார்வையிட்டு அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3589**
**அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண். 8</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் பேருந்து நிலையம் மற்றும் கல்பாலத்தடி கழிப்பறையில் பராமரிப்பு பணிகள் ரூ.4.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 24-09-2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்காணும் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.ஆர். ஜெயசிங், குழித்துறை | மதிப்பீட்டை விட 0.33% குறைவு |
| 2 | திரு.எஸ். பாபு, கண்ணக்கோடு | மதிப்பீட்டை விட 0.40% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசைஎண்.1-ல் திரு.ஆர். ஜெயசிங் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் பார்வையிட்டு அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3590**
**அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண். 9</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் பேருந்து நிலையம், குடிநீர் சுத்திகரிப்பு நிலையம், அம்மா உணவகம் மற்றும் நகராட்சி அலுவலகத்தில் தீயணைப்பு கருவியை பொருத்தும் பணிகள் ரூ.0.53 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 24-09-2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்காணும் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.ஆர். ஜெயசிங், குழித்துறை | மதிப்பீட்டை விட 0.13% குறைவு |
| 2 | திரு.எஸ். பாபு, கண்ணக்கோடு | மதிப்பீட்டை விட 6.49% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசைஎண்.1-ல் திரு.ஆர். ஜெயசிங் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் பார்வையிட்டு அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3591**
**அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண். 9**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பி.பி. முனிசாமி வணிக வளாகத்தில் உள்ள குத்தகைக்கு விடப்பட்ட கடைகளுக்கு கழிப்பறை வசதி இல்லாத காரணத்தினால் பொது மக்கள் மற்றும் வணிக வளாகத்தில் பணிபுரியும் ஊழியர்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். தற்போது JCI India, குழித்துறை என்ற நிறுவனத்தின் மூலம் அவர்களது சொந்த செலவில் கழிப்பறை கட்டி தருவதாக தெரிவித்து 25-09-2020-ல் கடிதம் கொடுத்துள்ளார். தற்போது நகராட்சியின் நிதிநிலைமை பற்றாக்குறையாக உள்ளதால் **JCI India,** குழித்துறை கொடுத்துள்ள கடிதத்தின்படி அவர்களது சொந்த செலவில் கழிப்பறை கட்டவும் பராமரிப்பிற்கும் அவர்களிடமே ஒப்படைப்பதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3592**
**அனுமதிக்கப்படுகிறது**

ஒப்பம்/- திரு. எஸ். மூர்த்தி,
ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,
குழித்துறை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர் மற்றும்
தனி அலுவலர்,
குழித்துறை நகராட்சி.